From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 86/2020

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | Jebasundari | Father/Husband Name | : Soundarajan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 21.05.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2024.

**1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. வழக்கறிஞர்கள் ஆஜர். குவிமுச 317ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்).**

நான் ஒத்தக்கடையில் வசிக்கிறேன். தமிழ்நாடு பொதுப்பணித்துறை மதுரை தல்லாகுளம் அலுவலகத்தில் தட்ட்சராக பணிபுரிகிறேன். சாட்சி சௌந்தராஜன் என் கணவர். நான் அலுவலகத்திற்கு ஒத்தக்கடையிலிருந்து எனது இருசக்கர வாகனமான TN 59 BM 1779 இரு சக்கர வாகனத்தில் செல்வேன். 20.03.2020ம் தேதி பணி முடித்துவிட்டு தல்லாகுளத்திலிருந்து ஒத்தக்கடையில் உள்ள என் வீட்டிற்கு மேற்படி இருசக்கர வானத்தில் வந்தேன். அரும்பனூர் குவாரி பகுதியில் உள்ள சமுதாய கூடம் அருகே வந்தபோது இரவு சுமார் 08.45 மணி இருக்கும். என் வாகனத்திற்கு பின்பு இரண்டு நபர்கள் பைக்கில் வந்தார்கள். இருவரும் ஹெல்மேட் போட்டிருந்தார்கள். அவ்வாறு வந்தவர்களில் வண்டியின் பின்னால் உட்காந்திருந்த நபர் நான் கழுத்தில் போட்டிருந்த 5 பவுன் வைக்கபொரி மாடல் தாலி செயினை அத்தார். நான் வண்டியிலிருந்து கீழே விழுந்தேன். அப்போது பார்த்த போது அவர்கள் வந்த வண்டியில் பதிவு எண் இல்லை.

2) அவர்கள் இருவரின் தோற்றத்தை பார்த்த வகையில் சுமார் 25 வயதிற்குள் இருப்பார்கள். செயினை பிடிங்கிவிட்டு வேகமாக போய்விட்டார்கள். என்னால் எழுந்திருக்க முடியவில்லை. அந்த இடத்தில ் உட்கார்ந்துகொண்டே கைபேசி மூலமாக சொல்லி சுமார் கால்

மணி நேரத்தில் என் கணவர் வந்தார். என்னை கூட்டி கொண்டு ஒத்தக்கடை காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். **புகார் அசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு எனது செயினை நீதிமன்றத்திலிருந்து பெற்று சென்றேன். எனது குழந்தை படிப்பு செலவிற்காக எனது செயினை அடமானம் வைத்துள்ளேன். என்னிடம் பறித்து சென்ற செயின் என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது. **மேற்படி புகைப்படம் அசாஆ2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

புகாரினை யார் எழுதியது என்றால் காவல் நிலையத்தில் இருந்த ஒரு பெண் காவலர் எழுதினார். நான் கையொப்பம் போட்டேன். எனக்கு அடிபட்டு எழுதமுடியாமல் இருந்ததால் அவர் எழுதினார். நீங்கள் என்ன படித்துள்ளீர்கள் என்றால் பி.ஏ. ஆங்கில இலக்கியம். புகாரில் உங்களுக்கு காயம் ஏற்பட்டு ரத்தம் வந்ததாக சொன்னீர்களா என்றால் இல்லை. உங்கள் கணவர் என்ன படித்துள்ளார் என்றால் ஒன்பதாம் வகுப்பு படித்துள்ளார். அவருக்கு தமிழ் நன்றாக படிக்க எழுத தெரியும் என்றால் சரிதான். நீங்கள் நீதிமன்றத்திலிருந்து: செயினை பெற்றுக்கொள்வதற்கு முன்பாக போலீசார் நபர்கள் யாரையாவது காண்பித்து அவர்கள்தான் உங்கள் செயினை அறுத்து சென்றதாக கூறினார்களா என்றால் இல்லை. நாளது தேதி வரையில் உங்கள் செயினை அறுத்த சம்பவத்தில் ஈடுபட்ட நபர்களை பார்க்கவில்லை என்றால் சரிதான். நீங்கள் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், உங்கள் நகையும் திருடு போகவில்லை என்றும், போலீசார் கேட்டுகொண்தற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் 1ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணையை அப்படியே ஏற்றுக்கொள்வதாக கூறப்பட்டது.**

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 86/2020

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | Soundarajan | Father/Husband Name | : Kannan |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 21.05.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2024.

**1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. வழக்கறிஞர்கள் ஆஜர். குவிமுச 317ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**(சாட்சி சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.)**

**முதல் விசாரணை: (அரசுதரப்பில்).**

நான் ஒத்தக்கடையில் வசிக்கிறேன். அசா1 என் மனைவி. நகைபட்டறையில் வேலை செய்கிறேன். என் மனைவி மதுரை தல்லாகுளத்தில் உள்ள பொதுபணித்துறை அலுவலகத்தில் தட்டச்சராக கடந்த 15 ஆண்டுகளாக பணிபுரிகிறார். ஒத்தக்கடையில் உள்ள என் வீட்டிலிருந்த என் மனைவி அலுவலத்திற்கு இரு சக்கர வாகனத்தில் செல்வார். 20.03.2020ம் தேதி இரவு 08.45 மணிக்கு என் மனைவி எனக்கு கைப்பேசி மூலம் தொடர்பு கொண்டு கழுத்தில் போட்டிருந்த செயினை அறுத்துவிட்டு போய்விட்டார்கள் என்று சொல்லி நான் நரசிங்கபெருமாள் கோவில் தாண்டி உள்ள சமுதாயகூடம் பக்கம் வந்தேன். என் மனைவி அழைத்துகொண்டு காவல் நிலையம் சென்று என் மனைவி உடம்புக்கு முடியாமல் இருந்ததால் நான் புகார் கொடுத்தேன். புகாரினை காவல் நிலையத்தில் இருந்த ஒரு பெண் காவலர் எழுதினார். நான் சொல்லி பெண் காவலர் எழுதினார். புகாரில் நான் கையொப்பம் போட்டேன். புகாரில் உள்ள சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை:**

உங்களுக்கு சம்பவம் குறித்து நேரடியாக தெரியாது என்றால் சரிதான். குற்ற சம்பவத்தில் ஈடுபட்டவர்களை போலீசார் உங்களுக்கு அடையாளம

காட்டினார்களா என்றால் இல்லை. நாளது தேதிவரையில் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் யார் என்று உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. உங்கள் மனைவியும் அதுகுறித்து சொன்னாரா என்றால் இல்லை. தங்க நகைகள் குறித்து உங்களுக்கு நன்கு தெரியும் என்றால் சரிதான். பொதுவாக 3 பவுனுக்கு அதிகமாக எடை கொண்ட நகையை அத்த உடன் அறுபடுமா என்றால் படாது. எளிமையாக அறுக்க முடியுமா என்றால் முடியாது. ஆனால் என் மனைவி செயினில் திருமாங்கல்யத்தை கயிறால் கோர்த்துபோட்டிருந்தார்.

2) சம்பவம் நடந்த எவ்வளவு நாள் கழித்து நகையை பெற்றுக்கொண்டிர்கள் என்றால் சுமார் 3 மாதம் இருக்கும். எங்கு வைத்து நகையை உங்களிடம் காண்பித்தார்கள் என்றால் நீதிமன்றத்தில் வைத்து. நீங்கள் நகையை நீதிமன்றத்திலிருந்து திரும்ப பெறும்போது நல்ல நிலையில் இருந்ததா அல்லது அறுந்து இருந்ததா என்றால் நல்ல நிலையில்தான் இருந்தது. அசாஆ2ல் புகைப்படத்தில் உள்ளதுபோலத்தான் நகை இருந்தது என்றால் ஆம். நீங்கள் நகை தொழில் செய்து வருவதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழக்கை பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் 1ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணையை அப்படியே ஏற்றுக்கொள்வதாக கூறப்பட்டது.**